# பிரேசில் அதிபருடன் பிரதமர் மோடி சந்திப்பு

செப்டம்பர் 10, 2023

பிரதமர் திரு நரேந்திர மோடி 10 செப்டம்பர் 2023 அன்று புது தில்லியில் நடைபெற்ற ஜி20 உச்சி மாநாட்டின் இடையே பிரேசில் அதிபர் திரு லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வாவை சந்தித்தார்.

இந்தியாவின் ஜி20 தலைமையின் வெற்றிக்காக பிரதமருக்கு அதிபர் லுலா டா சில்வா வாழ்த்து தெரிவித்தார். அடுத்த ஆண்டு பிரேசிலின் ஜி20 தலைமைக்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்த பிரதமர், இந்தியாவின் முழு ஆதரவையும் அவருக்கு உறுதியளித்தார்.

உயிரி எரிபொருள்கள், மருந்துகள், விவசாயம் சார்ந்த தொழில்கள், விண்வெளி மற்றும் விமானப் போக்குவரத்து ஆகியவற்றில் ஒத்துழைப்பு உள்ளிட்ட இந்தியா - பிரேசில் வியூகக் கூட்டாண்மையை வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்து தலைவர்கள் விவாதித்தனர்.

கூட்டத்தின் முடிவில் ஒரு கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

**புது தில்லி**
**செப்டம்பர் 10, 2023**